[1986 மே 5

நாமக்கல்லில் வீட்டுவசதி வாரியப் பணிகள்.

657—(* வினா எண். 4691) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தால் வீடு கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி நடைபெற்று வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) நில ஆர்ஜித பணிக்கு காலதாமதம் ஏற்பட காரணம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) ஆம்.

(ஆ) நாமக்கல் பகுதியில் தற்போது மொத்தம் 260 ஏக்கர் நிலங்களை வீட்டுவசதி வாரியத் திட்டங்களுக்காக கையகப் படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. சில நில சொந்தக்காரர்கள் நில ஆர்ஜிதத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றுள்ளனர். தடை நீங்கியவுடன், கையகப்படுத்தும் பணி துரிதமாக முடிவுறும்.

காங்கேயத்தில் குடிசை மாற்றுப் பணிகள்.

658—(* வினா எண் 5542) டாக்டர் அ. பொன்னுசாமி மற்றும் திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் காங்கேயத்தில் உள்ள அண்ணா நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) மற்றும் (ஆ): இல்லை.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதையும் கூட்டுறவு வீட்டு வசதி